**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

**Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Aani Thingal 01st day**

**Monday the 15th day of June' 2026**

**Calender Case No.126/2019**

**CNR No.TNPD01-003410-2019**

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | Palakarai P.S. in Cr.No. 532/2017 u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | Sudhkar @ Vaithan |
| 4. | Father's Name /Husband Name | Anthuvan |
| 5. | Occupation | Coolie |
| 6. | Residence | No.37, Pillama Nagar, Gandhimarket, EDA Street Road, Trichy. |
| 7. | Age | 37 |
| | **Date of** | |
| 8. | Occurrence | 27.05.2017 |
| 9. | Complaint | 27.05.2017 |
| 10. | Apprehension | 28.05.2017 |
| 11. | Release on bail | 22.06.2017 |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 15.07.2025 |
| 14. | closure of trial | 04.06.2026 |
| 15. | Sentence or order | 15.06.2026 |
| 16. | Service of copy of Judgment or | 15.06.2026 |

| | | |
|---|---|---|
| | finding on accused. | |
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **Chief** **Cross**<br>1) 15.07.2025 - 15.07.2025<br>2) 07.05.2026 - 07.05.2026<br>3) 18.05.2026 - 18.05.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 20.05.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 28.05.2017 --22.06.2017 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 08.11.2019 |

இவ்வழக்கு 04.06.2026–ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது வழக்கறிஞர் திரு. எம். செந்தில்குமார், M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி. மணிகண்டன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

## தீர்ப்புரை

கடந்த 27.05.2017–ம் தேதி 19.00 மணிக்கு திருச்சி மாநகரம் பாலக்கரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மல்லிகைபுரம் பொதுக்கழிப்பிடம் அருகில் இவ்வழக்கின் எதிரி அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளான 1.100 கிகி எடை கொண்ட கஞ்சாவை அரசு அனுமதியோ உரிமமோ இன்றி விற்பனை செய்வதற்காக சட்ட விரோதமாக வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன்கீழ் பாலக்கரை காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரி குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.11 வரையிலான சான்றாவணங்களும் சான்றுப்பொருள் 1 முதல் 4 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு–**

(I) அசா.1 திரு.செல்வம் தனது சாட்சியத்தில் கடந்த 27.05.2017–ம் தேதி பாலக்கரை காவல் நிலையத்தில் 18.30 மணிக்கு ஆய்வாளர் அவர்களுடன் தானும், த.கா.விஜயகுமார் ஆய்வாளருடன் ரோந்து புறப்பட்டு கஞ்சா விற்பதாக ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி ஆய்வாளருடன் பாலக்கரை மல்லிகைபுரம் பொது கழிப்பிடம் அருகே டிவிஎஸ் எக்ஸ்ல் 100 Heavy duty– அந்துவான் மகன் பைத்தான் என்ற சுதாகர், பிள்ளை மான் நகர், திருச்சி. சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்றுக்கொண்டிருந்த நபரை சோதனை செய்ய முற்பட்டபோது தப்பிக் முயன்றவர்கள் 19.00 மணிக்கு ஆய்வாளரின் உத்தரவு படி மேற்படி வாகனத்தை சோதனை செய்தபோது அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸடிக் பை ஒன்று வைத்திருந்தார் என்றும், எதிரிக்கு பரிசோதனை செய்ய சோதனை சம்மத கடிதம் கொடுத்தோம் என்றும், கைப்பற்றிய கஞ்சாவில் பரிசோதனைக்காக தலா 25 கிராம் வீதம் 2 பொட்டலங்கள் எடுத்து, காக்கி கவரில் வைத்து, மடித்து கட்டி, SHO சீல் வைக்கப்பட்டது என்றும் மீதமுள்ள 1.050 கிராம் கஞ்சாவை பிளாஸ்டிக் பையில் வைத்து SHO சீல் வைக்கப்பட்டது என்றும் 19.05 முதல் 20.00 மணி வரை எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து காவல் ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் தானும், த.கா.விஜயக்குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும், எதிரி ஓட்டி வந்த வாகனம் மற்றும் கஞ்சா மற்றும் பணம் ரூ.450/– ஆகியவற்றை கைபற்றுதல் மகஜரில்

கைப்பற்றினோம் என்றும் அதில் தானும், த.கா.விஜயக்குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும், 21.00 மணிக்கு எதிரி மற்றும் சொத்துக்களுடன், இருசக்கர வாகனம் ஆகியவற்றுடன் காவல் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்தும், ஆய்வாளர் எதிரி மீது இவ்வழக்கு பதிவு செய்ய தான் உதவியாக இருந்தேன் என்றும், பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.1 என்றும், கைதிற்கான அறிக்கை அ.த.சா.ஆ.2 என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1–வது கையெழுத்து அ.த.சா.ஆ.3 என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.4 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா.2 திரு.விஜயகுமார் தனது சாட்சியத்தில் தான் தற்போது பாலக்கரை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு பாலக்கரை காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 27.05.2017–ம் தேதி இரவு 8.30 மணிக்கு பாலக்கரை காவல் நிலைய ஆய்வாளருடன் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செல்வம் ஆகியோர் ரோந்த பணியில் இருந்தபோது கஞ்சா என்னும் போதை பொருள் சட்ட விரோதமாக திருச்சி காந்தி மார்க்கெட் எண்.37, தில்லைமான் நகரில் வசிக்கும் வைத்தான் என்ற சுதாகர் மல்லிகைபுறம் பொது கழிப்பிடம் டிவிஸ் எக்சல் 100 இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.TN 81 B 6435 பச்சை நிற வண்டியை வைத்து கஞ்சா விற்பனை செய்வதாக ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி இரவு சுமார் 19.00 மணிக்கு தக்க உபகரணங்களுடன் ரகசிய தகவலாளி சொன்ன இடத்திற்கு சென்று கண்காணித்தபோது அங்கு சந்தேகத்திற்கு இடமான டிவிஸ் எக்சல் 100 இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.TN 81 B 6435 பச்சை நிற வண்டியுடன் நின்று கொண்டிருந்தவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை பார்த்ததும் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்தவரை உன்னிடம் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா இருந்ததாக தங்களுக்கு தகவல் வந்துள்ளது என்றும்,

எதிரியாகிய உன்னை சோதனை செய்ய வேண்டும் நீ சம்மதித்தால் அரசு பதிவு பெற்ற அதிகாரியோ அல்லது நீதித்துறை நடுவர் முன்போ அழைத்து சென்று சோதனை செய்ய சொல்ல எதிரியாகிய உனக்குள்ள உரிமையை ஆய்வாளர் தங்கள் முன்னிலையில் எதிரியிடம் எடுத்து கூறினார் என்றும், அதற்கு எதிரி அங்கெல்லாம் செல்ல வேண்டாம் என்று ஆய்வாளர் முன்னிலையில் தங்களை சோதனை செய்யலாம் என்று 19.00 மணிக்கு தங்கள் முன்னிலையில் சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதில் தனி நபர் சாட்சி யாரும் முன் வராததால் அதில் தானும் SSI செல்வம் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு எதிரியை 19.05 மணிக்கு கைது செய்து எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை 19.05 மணி முதல் 20.00 மணி வரை பதிவு செய்தோம் என்றும், அதில் தனிநபர்கள் சாட்சிகள் யாரும் முன்வராதால் அதில் தானும் SSI செல்வமும் கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் தற்போது நீதிமன்றததில் காண்பிக்கப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த சாட்சி கையொப்பம் மட்டும் அதசாஆ.5 என்றும், பின்பு எதிரி வைத்திருந்த மஞ்சள் கலர் பையை வாங்கி சோதனை செய்தோம் என்றும், அதில் கஞ்சா என்னும் போதை பொருள் இருந்தது என்றும், அதன் எடையை பார்க்க வேண்டி தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்க்க அதில் 1.100 கிகி கஞ்சா இருந்தது என்றும், பின்பு அதிலிருந்து 25 கிராம் 2 பொட்டலங்களாக பகுப்பாய்வுக்கு என ஆய்வாளரால் மாதிரிகள் எடுக்கப்பட்டது என்றும், அவற்றிற்கு SHO சீல் வைக்கப்பட்டது என்றும், மீதமுள்ள கஞ்சாவும் அதே மஞ்சள் நிற பையில் கட்டி SHo சீல் வைக்கப்பட்டது என்றும், பின்பு எதிரி மற்றும் எதிரி வைத்திருந்த கஞ்சா விற்ற பணம் ரூ.450/–, எதிரி பயன்படுத்திய இருசக்கர வாகனம் ஆகியவற்றை 20.00 மணி முதல் 20.30 மணி வரை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார் அதற்கான கைப்பற்றுதல் மகஜரில் தானும் SSI செல்வமும் சாட்சி கையொப்பம்

செய்தோம் என்றும், பின்பு 21.00 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து பாரா வசம் எதிரியை ஆய்வாளர் ஒப்படைக்கவும் எதிரி மீது நிலைய கு.எண்.532/2017 u/s 8(c) r/w 20(B)(ii)(b) of NDPS Act ன்படி முதல் தகவல் அறிக்கை தயார் செய்து வழக்கு பதிவு செய்ய தானும் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அசா.3 திரு.பெரியசாமி தனது சாட்சியத்தில் தான் தற்போது திருச்சி மாவட்டம் கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று பெரம்பலூரில் வசித்து வருவதாகவும், கடந்த 27.05.2017–ம் தேதி திருச்சி மாநகரம் பாலக்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது தனக்கு கிடைத்த 57–ன்படியான அறிக்கையை மேல் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அதற்கான 57 அறிக்கை அதசாஆ.6 என்றும், பாலக்கரை மல்லிகைபுரம் பொது கழிப்பிடம் அருகில் கஞ்சா என்னும் போதை பொருள் விற்பதாக தனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி 27.05.2017–ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் SSI திரு.செல்வம், தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோருடன் தேவையான எடை, மிஷன் உபகரணங்களுடன் புறப்பட்டு மேற்படி பாலக்கரை மல்லிகைபுரம் பொது கழிப்பிடம் அருகில் கண்காணித்தபோது அங்கு சந்தேகத்திற்கிடமாக TVS XL 100 கெவி ஸ்கூட்டி TN 81 B 6435 என்ற பச்சை நிற வண்டியுடன் நின்று கொண்டிருந்து பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த வைத்தான் என்ற சுதாகர் என்ற எதிரியை போலீஸ் பார்ட்டி உதவியுடன் பிடித்து விசாரித்தேன் என்றும், அவர் தன்னிடம் தனது பெயர் வைத்தான் என்ற சுதாகர் என்று சொன்னார் என்றும், அவரிடம் அவர் கஞ்சா விற்பதாக

கிடைத்த நம்பகமான தகவலை பொறுத்து அவரிடம் எடுத்து விளக்கி விவரம் கூறியும் அது வகைக்கு அவரை சோதனை செய்ய வேண்டுமென்றும் அதற்கு அவர் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ உங்களை சோதனை செய்ய சொல்ல அவருக்குள்ள உரிமையை தான் அவரிடம் எடுத்து கூறினேன் என்றும், அதற்கு அவர் அங்கெல்லாம் வேண்டாம் என்றும் காவல் ஆய்வாளராகிய தாங்களே என்னை சோதனை செய்யலாம் என்றும் சோதனை செய்ய விருப்பம் தெரிவித்தார் என்றும், மேற்படி எதிரிக்கு கைது அறிவிப்பு நமுனா வழங்கியும் 19.05 மணிக்கு மேற்படி எதிரியை கைது செய்து சோதனை அறிவிப்பு வழங்கினேன் என்றும், மேற்படி அவர் வைத்திருந்த TVS XL 100 கெவி ஸ்கூட்டி TN 81 B 6435 என்ற பச்சை நிற வண்டியில் வைத்திருந்த கஞ்சாவை போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் எடை போட்டு பார்த்ததில் 1.100 கிகி இருந்தது என்றும், மேற்படி எதிரியை விசாரித்ததில் அவர் எந்தவித துன்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவலர், சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், அதில் தன்னிடம் உள்ள கஞ்சா என்னும் போதை பொருளையும் கஞ்சா விற்ற பணம் ரூ.450/–யும் கஞ்சா வைத்திருந்த TVS XL 100 கெவி ஸ்கூட்டி TN 81 B 6435 என்ற பச்சை நிற வண்டியையும் தங்களிடம் ஆஜர் படுத்துவதாக கூறினார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை தான் பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், கைப்பற்றப்பட்ட கஞ்சாவில் பகுப்பாய்விற்காக தலா 25 கிராம் கஞ்சாவை பிரொன் கலர் பேப்பரில் வைத்து நூலால் கட்டி 2 மாதிரிகள் எடுத்தேன் என்றும், அவற்றில் SHo சீல் வைத்தேன் என்றும், மீதமிருந்த 1.050 கிகி கஞ்சாவை பிளாஸ்டிக் பையில்

வைத்து நூலால் கட்டி SHO சீல் வைத்து மகஜர் தயார் செய்து தான் கைப்பற்றினேன் என்றும், மகஜரில் போலீஸ் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், பின்னர் எதிரி மற்றும் தடய சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனைக்கு உட்படுத்தியும் இவ்வழக்கில் காவல் நிலைய குற்ற எண்.532/2017 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act–ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அதற்கான முதல் தகவல் அறிக்கை அதசாஆ.7 என்றும், பிறகு Annexure I, Annexure II மூலமாக சான்று பொருட்களை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், அதற்கான Annexure I, Annexure II அதசாஆ.8, 9 என்றும், பின்பு வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் எண்.95 ன் மூலமாக கைப்பற்றினேன் என்றும், அதற்கான படிவம் எண்.95 அதசாஆ.10 என்றும், இவ்வழக்கில் எதிரியிடம் கைப்பற்றப்பட்ட மஞ்சள் நிற பை சாபொ.1 என்றும், கஞ்சா விற்ற பணம் ரூ.450/– சாபொ.2 என்றும், வழக்கில் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் சாபொ.3 என்றும், வழக்கில் கைப்பற்றப்பட்ட கஞ்சா சாபொ.4 என்றும், பின்பு வழக்கில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவை ரசாயண பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்பு பணிமாறுதல் காரணமாக தான் சென்று விட்டதால் ஆரோக்கியதாஸ் ஆய்வாளரிடம் வழக்கின் கோப்பினை ஒப்படைத்தேன் என்றும், தான் அவருடன் உடன் பணியாற்றிய வகையில் அவரது கையொப்பம் தனக்கு பரிச்சையம் என்றும், அவர் இவ்வழக்கில் தடய சொத்தினை பகுப்பாய்வுக்கு என திருச்சி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட மாதிரியை பகுப்பாய்வுக்கு உட்படுத்தியும் அங்கிருந்து வரப்பெற்ற பகுப்பாய்வு அறிக்கையை பெற்றும் பின்னிட்டு சாட்சிகளை விசாரித்தும் சம்பவம் உண்மை என புலன் விசாரணையில் துலங்கியதால்

இவ்வழக்கில் எதிரி மீது கடந்த 28.04.2018 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.11 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரி அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், எதிரி மீதான u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரியை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1 ஆக திரு. செல்வம் , உதவி ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா2 ஆக தலைமை காவலர் விஜயகுமார் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 5 குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா3 ஆக திரு. பெரியசாமி என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 6 முதல் அசாஆ 11 மற்றும் சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

12. அரசு தரப்பில் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள உதவி ஆய்வாளர் செல்வம் என்பவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் 27.05.2017–ம் தேதி தான் திருச்சி பாலக்கரை காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அவரது தலைமையில் தானும் , தலைமை காவலர் உதயகுமாரும் பாலக்கரை மல்லிகைபுரம் , பொதுக்கழிப்பிடம் அருகே கண்காணித்தபோது அங்கு TVS XL 100 Heavy Duty இருசக்கர வாகனத்துடன் நின்ற இவ்வழக்கின் எதிரியை சந்தேகத்திற்கிடமான

முறையில் அவர் நின்றதால் அவரை சோதனை செய்ய முற்பட்டபோது அவர் தப்ப முயன்றதால் அவரை 19.00 மணிக்கு பிடித்தும் அவரை பரிசோதனை செய்ய சோதனை சம்மத கடிதம் கொடுத்ததாகவும் , எதிரி வைத்திருந்த வாகனத்தில் பிளாஸ்டிக் பை ஒன்று வைத்திருந்ததாகவும் அதில் கஞ்சா இருந்தது என்றும் அதன் எடை 1.100 கிகி என்றும் அதில் பகுப்பாய்வுக்கென மாதிரி ஆய்வாளர் எடுக்கப்பட்டதாகவும் ஆய்வாளரிடம் எதிரி தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பின்னர் எதிரியை காவல் ஆய்வாளர் கைது செய்தும் எதிரியையும் , தடய சொத்தையும் எதிரி கஞ்சா விற்று வைத்திருந்த பணம் ரூ.450/–யும் இருசக்கர வாகனத்தினையும் காவல் நிலையம் கொண்டு வந்தும் காவல் ஆய்வாளர் எதிரி மீது வழக்கிட தான் உதவியாக இருந்ததாகவும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா1ன் சாட்சியத்தின் பிரகாரம் இவ்வழக்கின் எதிரி கையும் , மெய்யுமாக கஞ்சா மற்றும் கஞ்சா விற்ற பணத்துடன் ஆய்வாளரிடம் பிடிபட்டதும் ஆய்வாளர் எதிரியிடமிருந்து தடய சொத்துக்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளதும் தெரியவருகிறது.

13. மேலும் அசா2 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள தலைமை காவலர் விஜயகுமார் தன்னுடைய சாட்சியத்தில் 27.05.2017–ம் தேதி தான் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆய்வாளர் தலைமையில் தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வமும் ரோந்துக்கு சென்றதாகவும் அங்கு காந்தி மார்க்கெட் மல்லிகைபுரம் பொது கழிப்பிடம் அருகே இவ்வழக்கின் எதிரி சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றதால் அவரை பிடித்து காவல் ஆய்வாளர் உன்னை சோதனை செய்ய வேண்டுமென்றும் அது வகைக்கு

நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்பாகவோ அழைத்து சென்று சோதனை செய்ய எதிரிக்குள்ள உரிமையை ஆய்வாளர் எதிரியிடம் எடுததுக்கூறியதாகவும் அதற்கு எதிரி அங்கெல்லாம் தன்னை அழைத்து செல்லவேண்டாம் என்றும் காவல் ஆய்வாளராகிய தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதாகவும் அதன் அடிப்படையில் 19.00 மணிக்கு காவல் ஆய்வாளர் சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும் அதில் தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வமும் கையொப்பம் செய்ததாகவும் பின்பு ஆய்வாளர் முன்பாக 19.05 மணிக்கு எதிரி தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும் அதனை 19.05 மணி முதல் 20.00 மணி வரை பதிவு செய்ததாகவும் அதில் தானும் , சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வமும் கையொப்பம் செய்ததாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள தன்னுடைய சாட்சி கையெழுத்து அசாஆ 5 என்றும் பின்னர் எதிரி வைத்திருந்த 1.100 கிகி கஞ்சாவை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றியும் அதில் பகுப்பாய்வுகென மாதிரி எடுத்தும் எதிரி கஞ்சா விற்று வைத்திருந்த பணம் ரூ.450/– மற்றும் எதிரி பயன்படுத்திய இருசக்கர வாகனத்தினை 20.00 மணிமுதல் 20.30 மணி வரை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து மகசரில் தானும் , சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வமும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா2–ன் சாட்சியத்தின் பிரகாரமும் அசாஆ 1 சோதனை சம்மத கடிதத்தின் பிரகாரமும் NDPS சட்டப்பிரிவு 50–ன் படி காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரியிடம் சோதனை செய்ய எதிரிக்குள்ள உரிமைகளை எடுத்துக்கூறியும் சோதனை செய்தும் எதிரியிடமிருந்து கையும் , மெய்யுமாக 1.100 கிகி கஞ்சாவையும், கஞ்சா

விற்ற பணம் ரூ.450/−யும் கஞ்சா விற்க பயன்படுத்திய இருசக்கர வாகனத்தினையும் ஆய்வாளர் வழக்கு சோதனையின்போது எதிரியிடமிருந்து கைப்பற்றியுள்ளது அசா2−ன் சாட்சியத்தின் மூலம் தெளிவாக தெரியவருகிறது.

14. மேலும், அசா3 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள காவல் ஆய்வாளர் திரு. பெரியசாமியின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசாஆ 6 முன் தகவலின்படி அதனை காவல் ஆய்வாளர் அவரது மேல் அதிகாரிக்கு அனுப்பியும் தனக்கு 27.05.2017−ம் தேதி கிடைத்த தகவலின் அடிப்படையில் தானும், தலைமை காவலர் விஜயகுமார் , சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வம் ஆகியோர்களுடன் பாலக்கரை மல்லிகைபுரம் பொது கழிப்பிடம் அருகே சென்று கண்காணித்தபோது இவ்வழக்கின் எதிரி TVS XL Heavy Duty வாகனத்தில் வந்தவரை பிடித்து விசாரிக்க அவர் 1.100 அவர் பெயர் வைத்தான் என்ற சுதாகர் என்று சொன்னதாகவும் அவர் கஞ்சா விற்பதாக கிடைத்த நம்பகமான தகவலை பொறுத்து அவரிடம் விளக்கிக் கூறியும் அவரை அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ சோதனை செய்ய எதிரிக்குள்ள உரிமையை அவரிடம் எடுத்துக் கூறியதாகவும் அதற்கு அவர் தாங்களே சோதனை செய்யலாம் என விருப்பம் தெரிவித்ததாகவும் 19.05 மணிக்கு கைது அறிவுப்பு கொடுத்தும், சோதனை அறிவிப்பு கொடுத்தும் எதிரி வைத்திருந்த இருசக்கர வாகனத்தில் இருந்த 1.100 கிகி கஞ்சாவை அத்தாட்சியில் கைப்பற்றியும் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வம் மற்றும் தலைமை காவலர் விஜயகுமார் ஆகியோர்கள்

முன்னிலையில் பதிவு செய்தும் எதிரி வைத்திருந்த கஞ்சா , கஞ்சா விற்று வைத்திருந்த பணம் ரூ.450/–, கஞ்சா விற்க பயன்படுத்திய இருசக்கர வாகனம் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியும் எதிரியையும், தடய சொத்தையும் காவல் நிலையம் கொண்டு வந்தும் எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்தும் பாலக்கரை காவல் நிலைய குற்ற எண்.532/2017 ச/பி 8(c)r/w20(b)(ii)(B) of NDPS Act 1985 –ன் படி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் தடய சொத்தினை பொறுத்து நீதித்துறை நடுவர் முன்பாக ஆஜர்படுத்தியும் Inventory எடுத்தும் அசாஆ 8 Annexure –I அசாஆ 9 Annexure –II –க்கு நடவடிக்கை எடுத்ததாகவும் தடய சொத்தினை படிவம் எண்.95–ன் பிரகாரம் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும் அதற்கான படிவம் எண்.95 அசாஆ 10 என்றும் மஞ்சள் நிற பை சா.பொ.1 என்றும் கஞ்சா விற்ற பணம் ரூ.450/– சா.பொ.2 என்றும் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் சா.பொ.3 என்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா சா.பொ.4 என்றும் தடய சொத்தின் மாதிரியை நீதிமன்றத்தின் மூலம் காவல் ஆய்வாளர் ஆரோக்கியதாஸ் மூலம் அனுப்பி வைத்தும் பகுப்பாய்வு அறிக்கை பெற்றுள்ளதாகவும் அந்த பகுப்பாய்வு அறிக்கை அசாஆ 11 என்றும் எதிரி மீது காவல் ஆய்வாளர் திரு. ஆரோக்கியதாஸ் 28.04.2018–ம் தேதி இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசாஆ 11 பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் இவ்வழக்கின் எதிரியிடமிருந்து காவல் ஆய்வாளர் அசா3 கைப்பற்றியது கஞ்சா என்பது அறிவியல் பூர்வமாக அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

15. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில் தடய சொத்தின் மாதிரி நீதித்துறை நடுவர் முன்புக்கு NDPS சட்டப்பிரிவு 52(A) –ன் பிரகாரம் மாதிரி எடுத்திருக்காதது அரசு தரப்பு வழக்கினை பாதிக்கக்கூடிய ஒன்றாக உள்ளதாக முன் வைத்துள்ள வாதுரைப்பு குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா3 திரு. பெரியசாமி காவல் ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரியிடமிருந்து அசாஆ1 சோதனை சம்மத கடிதம் கொடுத்தும் , சோதனை செய்தும், எதிரியிடமிருந்து சா.பொ.1 முதல் 4–ல் கண்ட வழக்கு சொத்துக்களையும், கஞ்சாவை கைப்பற்றியுள்ளதால் அது வகைக்கு எதிரியிடமிருந்து கையும் மெய்யுமாக கஞ்சா அசா3 ஆல் கைப்பற்றப்பட்டுள்ளது அசா1 முதல் அசா3 ன் சாட்சியத்தின் பிரகாரம் ஒன்றாக ஒருசேர ஒத்துரைக்கப்பட்டும் இயற்கையாகவும், கோர்வையாகவும் சாட்சியம் முன் வைக்கப்பட்டுள்ளதால் எதிரி சம்பவ சமயம், சம்பவ இடத்தில் கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே நீதித்துறை நடுவர் முன்புக்கு மாதிரி அசாஆ8 Annexure – I, அசாஆ9 Annexure – II எடுக்கப்பட்டு உள்ளதால் நடந்த சம்பவம் உண்மை அல்ல என கருத இயலாது. ஆகவே, எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைப்பு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை என இந்நீதிமன்றம் தாழ்மையுடன் கருதுகிறது.

16. மேலும் அரசு தரப்பில் முன் வைத்துள்ள சாட்சியத்தின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 54–ன் பிரகாரம் எதிரி சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் 1.100 கிகி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி எளிதில்

அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது அந்த அனுமானத்தினை மறுத்து உரைக்கும் விதமாக இவ்வழக்கில் எதிரி தரப்பில் NDPS சட்டப்பிரிவு 54 ன் பிரகாரம் எவ்வித சாட்சியமும் , சான்றாவணமும் எதிரியால் முன்னிடப் பட்டிருக்கவில்லை.

17. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில், எதிரி மீதான NDPS சட்டப்பிரிவு 8(c)r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 –ன் கீழான குற்றச்சாத்து அரசு தரப்பில் அசா1 முதல் அசா3 சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அசாஆ1 முதல் அசாஆ11 வரையிலான சான்றவாணங்களின் பிரகாரமும் சா.பொ.1 முதல் சா.பொ.4 ன் பிரகாரமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

18. மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அசா1 முதல் அசா3 தங்களின் சாட்சியத்தில் சொல்லியுள்ள TN 81 B6435 என்ற பதிவெண் கொண்ட பச்சை நிற TVS XL 100 Heavy Duty இருசக்கர வாகனம் உண்மையில் யார் அதன் உரிமையாளர் என்றும் அந்த வாகனம் எவ்வகையில் எதிரியிடம் கைப்பற்றப்பட்டது என்பது குறித்தும் அரசு தரப்பில் எவ்வித விளக்கமும், ஆவணங்களும் சாட்சியமும் முன்னிடப்பட்டிருக்கவில்லை, அதுவகைக்கு மேற்கண்ட இருசக்கர வாகனத்தின் பதிவு சான்று எதனையும் பெற்று அசா3 காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கவில்லை. ஆகவே, இவ்வழக்கில் சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இருசக்கர வாகனம் எதிரியுடன் தொடர்பு படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை. ஆகவே , TN 81 B 6435 என்ற பதிவெண் கொண்ட பச்சை நிற TVS XL 100 Heavy Duty இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என யாரும் வாகனத்திற்கு

உரிமை கோரவில்லை என்பதாலும் அது Unclaimed என்பதாலும் TN 81 B 6435 என்ற பதிவெண் கொண்ட பச்சை நிற TVS XL 100 Heavy Duty இருசக்கர வாகனத்தினை இவ்வழக்கின் மேல் முறையீடு அல்லது மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் Drugs Disposal Committee மூலம் ஏலம் விட்டு அரசுக்கு ஆதாயம் செய்யவும் உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரி NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20. ஆகவே எதிரி சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து எதிரியிடம் வினவ, எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

| |
|---|
| எனது வயது 43 ஆகும். என்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும். |

ஆகவே, எதிரியின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2019–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் , எதிரி தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார் என்பதாலும் எதிரியின் கோரிக்கையினை ஏற்றும், எதிரிக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு

உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

21. முடிவாக எதிரி 1985–ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9–01 ச–பி 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 –ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் எதிரிக்கு 26 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/– விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், எதிரி ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428 ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.
எதிரி 28.05.2017 முதல் 22.06.2017 வரை சிறையில் இருந்துவந்துள்ளார் . எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/– ஆகும்.

22. இவ்வழக்கில் ஆர்பிஎண்.14/2018–ல் சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்ட கஞ்சாவை பொறுத்து இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகு பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும் , சா.பொ.1 மறுஉபயோகம் இல்லை என்பதால் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும் , சா.பொ.2 ரூ.450/– ஐ மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ அரசுக்கு ஆதாயமாக்கவும் மற்றும் சா.பொ3 இருசக்கர வாகனம் குறித்து யாரும் உரிமை கோராததால் மேல் முறையீடு

காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ Drugs Disposal Committee மூலம் ஏலம்விட்டு அரசுக்கு ஆதாயமாக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 15–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

T PANNEERSELVAM
Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.06.15 18:31:27 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**சாட்சி பட்டியல்–**

**அரசு தரப்பு சாட்சிகள்–**

அ.சா.1 திரு. செல்வம், உதவி ஆய்வாளர்.

அ.சா.2 திரு. விஜயகுமார், தலைமை காவலர்.

அ.சா.3 திரு. பெரியசாமி, காவல் ஆய்வாளர்.

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

அ.சா.ஆ.1 – பரிசோதனை அறிக்கை.
அ.சா.ஆ.2 – கைதுக்கான அறிக்கை
அ.சா.ஆ.3 – எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து
அ.சா.ஆ.4 – கைப்பற்றுதல் மகசர்
அ.சா.ஆ.5 – எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி

கையொப்பம்

அ.சா.ஆ.6 – ச/பி 57 ன் படியான விரிவான அறிக்கை.

அ.சா.ஆ.7 – முதல் தகவல் அறிக்கை.

அ.சா.ஆ.8 – Annexure I

அ.சா.ஆ.9 – Annexure II

அ.சா.ஆ.10 – படிவம் 95

அ.சா.ஆ.11 – பகுப்பாய்வு அறிக்கை.

**அரசு தரப்பு சான்றுப்பொருள்** –

சா.பொ.1 மஞ்சள்நிறபை.

சா.பொ.2 கஞ்சாவிற்ற பணம் ரூ.450/–

சா.பொ.3 இருசக்கர வாகனம்

சா.பொ.4 கைப்பற்றப்பட்ட கஞ்சா.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்**–இல்லை.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.06.15 18:31:39 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்

அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் உள்ளார்.
2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. எதிரிக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

Fair/Draft
Judgment in C.C.126/2019
Dt. 15.06.2026.